# வகுப்பு - 8 - வரலாறு, 5. இந்தியாவில் கல்வி வளர்ச்சி

**பயிற்சி வினாக்கள்:**

1. SSA எனப்படுவது ______.

   (1) Samagra Siksha Abiyan (2) Samagra Siksha for All

   (3) Sarva Siksha Abiyan (4) Sarva Siksha for All

2. வேதம் என்ற சமஸ்கிருதச் சொல்லின் பொருள் ______.

   (1) கல்வி (2) அறிவு (3) கடிகை (4) கணக்காயர்

3. தட்சசீலத்தை யுனெஸ்கோ அமைப்பு, உலகப் பாரம்பரியத் தளமாக எப்போது அறிவித்தது?

   (1) 1970 (2) 1975 (3) 1980 (4) 1985

4. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.

   (1) தட்சசீலம் (2) காஞ்சி (3) விக்ரமசீலா (4) இட்சிங்

5. கீழ்க்கண்டவற்றுள் எந்த இடத்தின் இடிபாடுகளை அலெக்சாண்டர் கன்னிங்காம் கண்டுபிடித்தார்?

   (1) நாளந்தா (2) தட்சசீலம் (3) விக்ரமசீலா (4) இட்சிங்

6. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணையைக் கண்டுபிடி.

   (1) ஆசிரியர்கள் - கடிகை

   (2) காந்தளூர் சாலை - புகழ் பெற்ற கல்லூரி

   (3) திருவிடைக்காளைக் கல்வெட்டு - நூலகம்

   (4) திருவாடுதுறைக் கல்வெட்டு - மருத்துவப் பள்ளி

7. நாளந்தா பல்கலைக்கழகம் எந்த இடத்தில் அமைந்துள்ளது?

   (1) காஞ்சி (2) வடமேற்குப் பாகிஸ்தான்

LIVEWORKSHEETS

(3) ஸ்ரீரங்கம் (4) ராஜகிருகம்

8. தவறான இணையைக் கண்டுபிடி.

(1) மக்தப் - தொடக்கப்பள்ளிகள்

(2) மதரசா - இடைநிலைப் பள்ளிகள்

(3) டெல்லி - மௌலானா சத்ருதீன் மதரசா

(4) முதல் மதரசா - இல்த்துமிஷ்

9. டெல்லியில் மதரசாவை நிறுவிய முதல் ஆட்சியாளர் யார்?

(1) இல்த்துமிஷ் (2) பிரான்சிஸ் சேவியர்

(3) சீகன்பால்கு (4) புளூட்ச்சோ

10. இந்தியாவில் நவீன கல்வி முறையைத் தொடங்கிய முதல் ஐரோப்பிய நாடு

(1) இங்கிலாந்து (2) டென்மார்க் (3) பிரான்சு (4) போர்ச்சுக்கல்

11. பிரான்சிஸ் சேவியர் கீழ்க்கண்ட எந்த இடத்தில் பல்கலைக்கழகத்தைத் தொடங்கினார்?

(1) கொச்சி (2) ஜெய்பூர் (3) பம்பாய் (4) பனாரஸ்

12. கோவாவில் முதல் கல்லூரி தொடங்கப்பட்ட ஆண்டு ________.

(1) 1576 (2) 1575 (3) 1675 (4) 1676

13. C.S. ஜான் என்பவர் தரங்கம்பாடியில் 20 இலவசப் பள்ளிகளை எந்த ஆண்டு நிறுவினார்?

(1) 1812 (2) 1912 (3) 1817 (4) 1917

14. மதராஸ், பனாரஸ் ஆகிய இடங்களில் எந்த மொழி சார்ந்த கல்லூரிகள் துவங்கப்பட்டன?

(1) சமஸ்கிருதம் (2) ஆங்கிலம் (3) தமிழ் (4) பிரெஞ்சு

LIVEWORKSHEETS

15. இந்தியாவில் கல்வி மேம்பாட்டிற்காக, ஆண்டுதோறும் மானியமாக 1 லட்சம் ரூபாய் தொகையை வழங்குவதற்கான ஏற்பாட்டினைச் செய்த பட்டயச் சட்டம்

(1) 1813 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் (2) 1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம்

(3) 1853 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் (4) 1858 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம்

16. பொருத்துக.

i. தஞ்சாவூர் - a) வட்டார மொழிக் கல்வி

ii. வார்தா - b) அச்சுக்கூடம்

iii. உட்ஸ் - c) காந்தியடிகள்

iv. மவுண்ட் ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டன் - d) ஆங்கிலக் கல்வியின் மகாசாசனம்

(1) i - a ii - b iii - c iv - d (2) i - b ii - c iii - a iv - b

(3) i - b ii - c iii - d iv - a (4) i - c ii - a iii - b iv - d

17. பொருத்துக.

i. 1882 - டாக்டர் ராதாகிருஷ்ணன் கல்விக் குழு

ii. 1944 - வார்தா கல்வித் திட்டம்

iii. 1937 - ஹண்டர் கல்விக் குழு

iv 1948 - சார்ஜண்ட் அறிக்கை

(1) i - d ii - c iii - a iv - b (2) i - b ii - c iii - a iv - d

(3) i - c ii - d iii - b iv - a (4) i - a ii - b iii - c iv - d

18. புதிய கல்விக் கொள்கை திருத்தி அமைக்கப்பட்ட ஆண்டு ______.

(1) 1992 (2) 1982 (3) 1972 (4) 1962

19. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம், எந்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டமாகும்?.

(1) 11-வது ஐந்தாண்டுத் திட்டம் (2) 10-வது ஐந்தாண்டுத் திட்டம்

LIVEWORKSHEETS

(3) 9-வது ஐந்தாண்டுத் திட்டம் (4) 8-வது ஐந்தாண்டுத் திட்டம்

20. சரஸ்வதி மஹால் நூலகம் அமைந்துள்ள ஊர் எது?

(1) தஞ்சை (2) மதுரை (3) சென்னை (4) கொல்கத்தா

21. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் எந்த ஆண்டு அமைக்கப்பட்டது?

(1) 1930 (2) 1940 (3) 1950 (4) 1929

22. பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு ______.

(1) 1966 (2) 1976 (3) 1956 (4) 1950

23. சத்துணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்ட ஆண்டு ______.

(1) 1992 (2) 1982 (3) 1972 (4) 1962

24. சாணக்கியர் அர்த்தசாஸ்திரத்தை எங்குத் தங்கித் தொகுத்ததாகக் கூறப்படுகிறது?

(1) காஞ்சி (2) தட்சசீலம் (3) நாளந்தா (4) விக்கிரமசீலா

25. தவறான கூற்றைக் கண்டுபிடி.

(1) சரகர் மற்றும் சுஸ்ருதர் ஆகியோரின் குறிப்புகள் மருத்துவத்தைக் கற்றுக்கொள்ள ஆதாரங்களாக இருந்தன.

(2) கல்வியானது மனிதனின் மூன்றாவது கண்ணாகக் கருதப்படுகிறது.

(3) கோவில்கள் கற்றல் மையங்களாகத் திகழ்ந்தன.

(4) இவற்றில் எதுவுமில்லை.

26 வேதம் என்ற சொல் எம்மொழியில் இருந்து வந்தது?

(1) இலத்தீன் (2) சமஸ்கிருதம் (3) பிராகிதம் (4) பாலி

27. பின்வருவனவற்றுள் எது பண்டையக் காலத்தில் கற்றலுக்கான முக்கிய மையமாக இருந்தது?

(1) விகாரங்கள் (2) குருகுலம் (3) பள்ளிகள் (4) இவையனைத்தும்

LIVEWORKSHEETS

28. இந்தியாவின் மிகப் பழமையான நாளந்தா பல்கலைக் கழகம் அமைந்துள்ள இடம் ______.

(1) உத்திரப் பிரதேசம் (2) பீகார் (3) மகாராஷ்டிரம் (4) பஞ்சாப்

29. பின்வரும் குழுக்களில், எந்தக் குழு பல்கலைக்கழக மானியக் குழுவினை அமைக்கப் பரிந்துரை செய்தது?

(1) சார்ஜண்ட் அறிக்கை, 1944 (2) இராதாகிருஷ்ணன் கல்விக் குழு, 1948

(3) கோத்தாரி கல்விக் குழு, 1964 (4) தேசியக் கல்விக் கொள்கை, 1968

30. இந்தியாவில் புதிய கல்விக் கொள்கை எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?

(1) 1968 (2) 1992 (3) 2009 (4) 1986

31. 2009 ஆம் ஆண்டு இலவசக் கட்டாயக் கல்விச் சட்டத்தின் விதிகளை அமல்படுத்துகின்ற முதன்மையான அமைப்பு ______.

(1) SSA (2) RTE (3) RMSA (4) SMSA

32. பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. பிரான்சிஸ் சேவியர் | - | a. சரஸ்வதி மஹால் |
| ii. உட்ஸ் கல்வி அறிக்கை | - | b. கொச்சி பல்கலைக் கழகம் |
| iii. இரண்டாம் சரபோஜி | - | c. மதராஸில் மேற்கத்தியக் கல்வி |
| iv சர்.தாமஸ் மன்றோ | - | d. இந்தியக் கல்வியின் மகா சாசனம் |

(1) i - d ii - c iii - a iv - b (2) i - b ii - c iii - a iv - d

(3) i - b ii - d iii - a iv - c (4) i - a ii - b iii - c iv - d

33. பின்வருவனவற்றுள் சரியானவற்றைத் தேர்ந்தெடு.

அ. நாளந்தா பல்கலைக் கழகம் கி.பி.(பொ.ஆ) ஐந்தாம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

LIVEWORKSHEETS

ஆ. பண்டைய இந்தியாவில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது முதல் அவர்களின் பாடத்திட்டத்தினை வடிவமைப்பது வரை அனைத்து அம்சங்களிலும் ஆசிரியர்கள் முழுமையான சுயாட்சி கொண்டிருந்தனர்.

இ. பண்டைய காலத்தில் ஆசிரியர்கள் கணக்காயர் என்று அழைக்கப்பட்டனர்.

ஈ. சோழர்கள் காலத்தில் புகழ்பெற்ற கல்லூரியாக காந்தளூர் சாலை இருந்தது.

(1) அ மற்றும் ஆ சரி (2) ஆ மற்றும் ஈ சரி

(3) இ மற்றும் ஈ சரி (4) அ, ஆ மற்றும் இ சரி

34. சரியான இணையைத் தேர்ந்தெடு.

(1) மக்தப்கள் - இடைநிலைப்பள்ளி

(2) ஆங்கிலக் கல்வி - மெக்காலேயின் கல்விக் குறிப்பு

(3) கரும்பலகைத் திட்டம் - இடைநிலைக் கல்வி குழு

(4) சால போகம் - கோயில்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள்

35. வல்லபை பெருஞ்சாலை தமிழ்நாட்டில் எங்குள்ளது?

(1) சேலம் (2) இராமநாதபுரம் (3) திருச்சி (4) கன்னியாகுமரி

LIVEWORKSHEETS